# நமது இசைச் செல்வம்

**இசைத்தமிழ்**

முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழ் நமது புராதன கலைச் செல்வம், பரம்பரை பரம்பரையாக இசைத்தமிழை நாம் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறோம். நம் இசை முறையில் ஒரே நேரத்தில் ஒரு ஸ்வரம் தான் ஒலிக்கும் (Melodic form) ஐரோப்பிய இசையில் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று இணை ஸ்வரங்கள் ஒலிக்கும் (Harmonic form).

**கர்நாடக இசையும், ஹிந்துஸ்தானி இசையும்**

நம்முடைய இசை, கர்நாடக இசை என்றும், ஹிந்துஸ்தானி இசை என்றும் இருவகைப்படும். இரண்டும் இராகங்களின் சிறப்பை அடிப்படையாகக் கொண்டவை தான். கர்நாடக இசையில் அதிக கமகமும், அழுத்தமும் பிரயோகிக்கப்படுகிறது. ஹிந்துஸ்தானி இசையில் குழைவுகள் அதிகமாய் இருப்பதைக் காணலாம். இவ்விரு வகை இசைக்கும் பொதுவாக பல இராகங்கள் இருக்கின்றன. உதாரணமாக கர்நாடக இசையில் ஹிந்தோளம் என்று கூறப்படும் ராகம், ஹிந்துஸ்தானி இசையில் மால்கோஸ் என்று அழைக்கப்படுகிறது. இதே போல், ஸ்ரீரஞ்சினியை பாகேஸ்வரி என்றும், மோகன ராகத்தை பூபாலி என்றும் ஹிந்துஸ்தானி இசையில் அழைக்கிறார்கள். ஹிந்துஸ்தானி ராகங்களான பேஹாக், அமீர் கல்யாணி, காபி, சிந்துபைரவி போன்றவை கர்நாடக இசையிலும் தாராளமாகப் பாடப்படுகின்றன.

**2. நசரச ராகங்கள்**

நமது இசையின் சிறப்புக்கு ஆதாரம் நாம் கையாளும் பல்வேறு இராகங்களே, நமது உள்ளத்தில் உலவும் உணர்ச்சிகளையும், இன்பங்களையும், துன்பங்களையும் உணர்த்தும் ஆற்றல் பெற்றவை இந்த இராகங்களே. இவை கோபம், சிருங்காரம், சோகம் போன்ற நவசரங்களை விளக்கும் வன்னம பெற்றவை.

**சிருங்கார ரசம்**

நாயக, நாயகி பாவத்தை, அதாவது சிருங்கார ரசத்தை வெளிப்படுத்துவதற்கு கமாஸ், காபி, பேஹாக், யமுனா, கல்யாணி, நாட்ட குறிஞ்சி முதலிய இராகங்கள் பயன்படுகின்றன. இயேசு பெருமானைத் தலைவராகவும், திருச்சபையைத் தலைவியாகவும் பாவித்து, தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் அநேக ஞானக் கீர்த்தனங்களையும், பெத்தலேம் குறவஞ்சி என்னும் இசை நாடகத்தையும் எழுதியுள்ளார். 'வானம் பூமியோ' (கீர்த்தனை எண்.26 – பழைய எண்.27) என்னும் கீர்த்தனையின் ஐந்தாவது சரணத்திலும், 'பாவி நான் என்ன செய்வேன்' (கீர்த்தனை எண்.55 – பழைய எண்.57) என்னும் கீர்த்தனையின் முதலாவது சரணத்திலும் இந்த நாயக, நாயகி பாவத்தைக் காணலாம்.

**சோக ரசம்**

சோக ரசத்தைச் சித்தரிப்பதற்கு முகாரி, சாவேரி, கேதாரகௌளை, சஹானா, நாத நாமக்கிரியா, சுபபந்துவராளி போன்ற இராகங்கள் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'புண்ணியன் இவர் யாரோ' (கீர்த்தனை எண்.45) என்ற கீர்த்தனை கேதார கௌளை இராகத்திலும், 'ஆதம் புரிந்த பாவத்தாலே (கீர்த்தனை எண்.47 – பழைய எண்.46) என்ற கீர்த்தனை நாத நாமக்கிரியா இராகத்திலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

**தாலாட்டு துதி, மங்கலம்**

தாலாட்டுப் பாடல்களைப் பாடுவதற்கு நீலாம்பரி, குறிஞ்சி, ஆனந்த பைரவி, நவரோஜ் போன்ற இராகங்கள் பொருத்தமாக இருக்கின்றன. ஆண்டவரைத் துதித்துப் பாடுவதற்கு ஹம்சம்வதனி, சங்கராபரணம், செஞ்சுருட்டி, கம்பீரநாட்டை, குந்தரவராளி, கௌளை, நாட்டை, அரபி போன்ற இராகங்கள் உபயோகப்படுகின்றன. இதற்கு சத்தாய் நிஷ்களமாய் (கீர்த்தனை எண்.1) - சங்கராபரணம், தெய்வன்பின் வெள்ளமே (கீர்த்தனை எண்.8) – குந்தலவராளி, வானம் பூமியோ (கீர்த்தனை எண்.26, பழைய எண்.27) செஞ்சுருட்டி போன்றவை சில எடுத்துக்காட்டுகள் எனலாம். ஓர் இசை நிகழ்ச்சியின் முடிவில் மங்களம் பாடுவதற்கு சுருட்டி, மத்யமாவதி, சௌராஷ்டிரம் போன்ற இராகங்களில் அமைந்த பாடல்கள் பாடப்படுகின்றன. 'சீர் யேசு நாதனுக்கு ஜெய மங்களம் (கீர்த்தனை எண்.319 – பழைய எண்.379)

என்னும் சௌராஷ்டிரக் கீர்த்தனையையும் எடுத்துக்காட்டுகளாகச் சுட்டிக்காட்டலாம்.

**4. காலத்துக்கேற்ற கானங்கள்**

நம் இசையின் மற்றொரு சிறப்பு என்னவெனில் காலை, நடுப்பகல், மாலை, இரவு முதலிய நேரங்களில் பாடுவதற்கென்று சில இராகங்கள் உண்டு. அதிகாலை நேரத்தில் இறைவனைத் துதித்துப்பாடுவதற்கு பூபாளம், பௌளி, பிலஹரி போன்ற இராகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாலை நேரத்தில் பூபாள இராகத்தில் இறைவனை ஆராதிக்கும் போது, நம் உள்ளம் அதில் லயித்து, அப்படியே ஒன்றி விடுகிறது. இந்த இராகங்களுக்கு எத்தனை சக்தி இருக்கிறது!

'கதிரவன் எழுகின்ற காலையில்' (கீர்த்தனை எண்.279 – பழைய எண்.332) என்ற கீர்த்தனையும் 'எழுந்தருளும் ஏசு சுவாமி' (கீர்த்தனை பழைய எண்.66) என்ற கீர்த்தனையும் பூபாள இராகத்தில் பாடப்படுவதை நாம் காணலாம். புது வருடத்தினத்தன்று காலையில் பாடும் 'ஆனந்தமே! ஜெயா! ஜெயா! என்ற கீர்த்தனை எண் (302, பழைய எண்.359) பிலஹரி இராகத்தில் அமைந்திருப்பதைக் காணுங்கள்.

மனிதப் படைப்பிற்கு முன்னதாகவே இசை தோன்றியது என்பதை வேதாகமம் கூறுகின்றது. பூமியின் படைப்பின் போது பின்னுலகில் நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடி, தேவ புத்திரர் எல்லோரும் கெம்பீரித்தார்களே'' – யோபு 38 : 7 மனிதன் இசை இயற்றும் ஆற்றலுடனும் இசை பாடும் ஆற்றலுடனும் படைக்கப்பட்டிருக்கின்றான். நாம் தமிழ்நாட்டுப் பண்பாட்டு நயத்துடன், இசை வழி இறைப்பணி புரிவோமாக!

கலைமாமணி டி.ஏ.தனபாண்டியன் எழுதிய
இசைவழி இறைபணி
நூலிருந்து எடுத்தெழுதியவா்.

**திருமதி.தேவிகா ஜெயசிங்**